# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 097 · திங்கள் Monday · 06.07.2026 · பக்கங்கள் Pages:4 · ₹6 · ஈரோடு Erode


# உழைப்பையும் விசுவாசத்தையும் காட்ட வேண்டும்

## முதலமைச்சர் விஜய் அறிவுறுத்தல்



சென்னை: திமுக எம்.பி. ஜெகத்ரட்சகனின் மகன், அதிமுக முன்னாள் அமைச்சர் வைகைச் செல்வன் உள்ளிட்ட பலர் தவெகவில் நேற்று இணைந்தனர். அப்போது, உங்களது உழைப்பையும், விசுவாசத்தையும் நமது கட்சியிலும் காட்ட வேண்டும் என முதல்வர் விஜய் அறிவுறுத்தினார்.

தமிழகத்தில் விஜய் தலைமையிலான தவெக ஆட்சி அமைந்ததைத் தொடர்ந்து, மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள், எம்எல்ஏ-க்கள் மற்றும் முக்கிய நிர்வாகிகள் அக்கட்சியில் இணைந்து வருகின்றனர். தொடர்ந்து, ஒவ்வொரு சனிக்கிழமையும் பனையூரில் உள்ள கட்சித் தலைமை அலுவலகத்தில் மாற்றுக்கட்சியினர் இணைப்பு விழா நடத்தப்பட்டு வருகிறது.

இணைப்பு விழாவில் பல முக்கியப் புள்ளிகள் தவெகவில் இணைந்தனர். திமுகவின் முக்கிய முகமாக அறியப்படும் அரக்கோணம் எம்.பி. ஜெகத்ரட்சகனின் மகன் சந்தீப் ஆனந்த் தவெகவில் இணைந்தது திமுக வட்டாரத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதிமுக முன்னாள் அமைச்சர் வைகைச் செல்வன், முன்னாள் எம்எல்ஏ கலைராஜன், தமிழ்நாடு காங்கிரஸ் விவசாய பிரிவு மாநில பொதுச் செயலாளர் ஆர்.எஸ். ராஜன், பெங்களூரு வா.புகழேந்தி ஆகியோர் இணைந்தனர். இதேபோல் நடிகர்கள் ரவி மரியா, பஷீர், அதிமுக கவுன்சிலர் கே.பி.கே.சதீஷ் உள்ளிட்ட ஏராளமான மாற்றுக் கட்சி நிர்வாகிகள் தங்களை தவெகவில் இணைத்துக் கொண்டனர். இணைப்பு விழா நடந்து கொண்டிருந்த போது, மாலை 4 மணியளவில், முதல்வர் விஜய் பனையூர் அலுவலகத்துக்கு வருகை தந்தார். அங்கு ஏற்கெனவே, விஜய்யின் வருகைக்காக காத்திருந்த, தவெகவில் இணைந்த முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர், எம்.ஆர்.விஜயபாஸ்கர், கடம்பூர் ராஜூ, உடுமலை ராதாகிருஷ்ணன், எம்.சி. சம்பத் உள்ளிட்டோரைத் தனித்தனியாகச் சந்தித்துப் பேசினார். பின்னர் அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

அப்போது, விஜய் பேசியதாவது: நீங்கள் என் மீது நம்பிக்கை வைத்து இணைந்துள்ளீர்கள். உங்கள் உழைப்பை நான் அறிவேன். அதே உழைப்பையும் விசுவாசத்தையும் நமது கட்சியிலும் காட்ட வேண்டும். மக்கள் பணி மட்டுமே நமக்கு முக்கியம். அதற்கு நீங்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு தர வேண்டும். உங்களின் உத்வேகமான செயல்பாடுகள் தொடரட்டும். இவ்வாறு அவர் கூறினார். முதலமைச்சரின் வருகையை முன்னிட்டு கரூரில் பொதுமக்களைச் சந்திப்பதற்கும், நலத்திட்ட உதவிகள் மற்றும் பணி நியமன ஆணைகளை வழங்குவதற்கும் தகுந்த இடத்தைத் தேர்வு செய்யும் பணிகள் இன்று (ஜூலை 05) நடைபெற்றது. இதற்காக தமிழக வெற்றிக் கழகத்தின் (தவெக) கரூர் மாவட்டச் செயலாளர் மதியழகன் மற்றும் அண்மையில் தவெகவில் இணைந்த முன்னாள் அமைச்சர் எம்.ஆர். விஜயபாஸ்கர் ஆகியோர் கூட்டாகச் சென்று கரூரின் முக்கியப் பகுதிகள் மற்றும் மைதானங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

முதலமைச்சர் விஜய் அவர்கள் தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு மேற்கொள்ளும் மிக முக்கிய மாவட்டப் பயணம் இதுவாகும். இப்பயணத்தின் போது, கடந்த 2025 செப்டம்பர் 27 அன்று கரூரின் வேலுசாமிபுரத்தில் நடைபெற்ற தவெக தேர்தல் பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த 41 பேரின் குடும்பத்தினரை முதலமைச்சர் நேரில் சந்தித்து ஆறுதல் கூற உள்ளார். பாதிக்கப்பட்ட அந்த 41 குடும்பங்களைச் சேர்ந்த தகுதியான தலா ஒரு நபருக்கு அரசு வேலை வழங்குவதற்கான பணி நியமன ஆணைகளை இந்த மக்கள் சந்திப்பு மேடையிலேயே முதலமைச்சர் விஜய் வழங்க உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# "தமிழகத்தை அரசியல் பேரிடர் காலத்தில் இருந்து திமுக நிச்சயம் மீட்கும்" எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு



சென்னை: "இன்று சில பேர் சோ:பா வந்தவுடன் நம்மை விட்டு போயிருக்கிறார்கள். இஸ்லாமியர்களுக்கும் திமுகவுக்குமான உறவை யார் வந்தாலும் பிரிக்க முடியாது. இப்போது ஏற்பட்டுள்ள இந்த அரசியல் பேரிடர் காலத்தில் இருந்து, தமிழகத்தை திமுக நிச்சயம் மீட்கும்" என சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார். சென்னையில் திமுக நிர்வாகி இல்ல திருமண விழாவில் கலந்துகொண்டு பேசிய உதயநிதி ஸ்டாலின், " இந்த நிகழ்ச்சியில் இஸ்லாமிய பெருமக்கள் பலரும் கலந்து கொண்டிருக்கிறீர்கள். இன்று நாட்டில் என்ன நடக்கிறது என எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். இன்று சில பேர் சோ:பா வந்தவுடன் நம்மை விட்டு போயிருக்கிறார்கள். ஆனால், நீங்கள் அத்தனை பேரும் திமுகவோடு இருப்போம் என உறுதியோடு வந்துள்ளீர்கள். இஸ்லாமியர்களுக்கும் திமுகவுக்குமான உறவை யார் வந்தாலும் பிரிக்க முடியாது. யார் என்ன சொன்னாலும், எந்த அவதூறுகளை பரப்பினாலும், சிறுபான்மை மக்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் திமுக என்றைக்கும் காவல் அரணாக நிச்சயம் இருக்கும். இப்போது ஏற்பட்டுள்ள இந்த அரசியல் பேரிடர் காலத்தில் இருந்து, தமிழகத்தை திமுக நிச்சயம் மீட்கும்" எனத் தெரிவித்துள்ளார்.

ஆட்சி அதிகாரத்தை வைத்துக் கொள்ளை அடித்த தீயசக்தி திமுகவிற்கு, அரசியலில் கொள்ளை அடிக்க இயலாத நிலையை உண்டாக்கிய தமிழக வெற்றிக் கழகத்தின் வருகைதான் திமுகவிற்கான அரசியல் பேரிடர் காலம்.

லஞ்சம், ஊழலற்ற நிர்வாகத்தை உருவாக்கி வரும் எங்கள் வெற்றித் தலைவர் தலைமையிலான மனசாட்சி உள்ள மக்களாட்சிதான் தீயசக்தி திமுகவிற்கான அரசியல் பேரிடர் காலம்.

அடித்த கொள்ளையால் அகப்பட்டு, தலைமறைவாகவும் வெளிநாட்டு மருத்துவமனைகளிலும் பதுங்கித்திரியும் திமுகவின் முன்னாள் அமைச்சர்களுக்கும்தான் இது அரசியல் பேரிடர் காலம்.

திமுக முன்னாள் அமைச்சர்கள் சிக்கினால், முக்கிய குடும்பமும் சிக்கி, திக்கித் திணறுமோ என்பதுதான் தீயசக்தி திமுகவிற்கான அரசியல் பேரிடர் காலம்.

இப்படி தீயசக்தி திமுகவால் தமிழக அரசியலுக்கும் தமிழக மக்களுக்கும் பேரிடர் காலம் ஏற்பட்டதும் உண்மை. ஆட்சியில் இருந்தபோது அடித்த கொள்ளைகளால் திமுகவிற்கும் இப்போது பேரிடர் காலம் ஏற்பட்டு இருக்கிறது என்பதும் உண்மை.

ஆனால், எங்கள் வெற்றித் தலைவர் தலைமையிலான மனசாட்சி உள்ள மக்களாட்சியின் காரணமாக, தீயசக்தி திமுகவால் ஏற்பட்ட பேரிடர் விலகி, தமிழக மக்களுக்குப் பெருமகிழ்ச்சி ஏற்பட்டுள்ள காலமிது.

அந்த வகையில், தீதும் சூதும் நிறைந்த திமுகவிடம் இருந்து தப்பிய தமிழக மக்களுக்கு இது அழகிய தென்றல் காலம்.

அகமகிழும் பேரின்ப காலம். ஆனால், தீயசக்தி திமுகவிற்கு இது பேரிடர் காலம்தான். அதில் சந்தேகமே இல்லை.

எப்படியோ இப்படி உளறியாவது உண்மையை ஒப்புக்கொண்ட உதயநிதிக்கு வாழ்த்துகள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


## வரி விளம்பரங்கள்



தினத்தளம்

DHINATH DHALAM

மணமாலை · கோவில் திருவிழா · அரசியல் நிகழ்வுகள்
கல்வி · திருமண நாள் · பிறந்த நாள் · ஆண்டு விழா
திறப்பு விழா · வீட்டு சுப நிகழ்ச்சிகள் · நினைவு நாள்
ரியல் எஸ்டேட் · பைனான்ஸ் · நகைக்கடன்
வேலை வாய்ப்பு · ஆட்டோமொபைல்

தொடர்புக்கு : ☎ +919444082959


# தமிழகத்தில் ஜூலை 11 வரை மழைக்கு வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம்

சென்னை: தமிழகத்தில் நாளை முதல் ஜூலை 11-ம் தேதி வரை ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: வடமேற்கு வங்கக்கடல் பகுதிகள் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளது. இது வடக்கு ஒடிசா கடலோரத்தில் சந்த்பாலி மற்றும் பாலசோர்க்கு இடையே திகாவிர்க்கு அருகில் நாளை கரையை கடக்கக்கூடும்.



தமிழகத்தில் நாளையும் (ஜூலை 6), நாளை மறுதினமும் மேற்கு தொடர்ச்சிமலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

ஜூலை 8-ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழையும், இதர தமிழகத்தில் லேசானது முதல் மிதமான மழையும், ஜூலை 9 முதல் 11-ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 100 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 84 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக நீலகிரி மாவட்டம் அவலாஞ்சி, திருநெல்வேலி மாவட்டம் நாலுமுக்கில் தலா 8 செமீ, ஊத்தில் 6 செமீ, நீலகிரி மாவட்டம் மேல் பவானி, திருநெல்வேலி மாவட்டம் காக்காச்சி, கன்னியாகுமரி மாவட்டம் முள்ளங்கினாவிளை, கோவை மாவட்டம் சின்னக்கல்லாரில் தலா 4 செமீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# மருத்துவக் குறியீட்டுப் பயிற்சிக்கான கல்வி உதவித்தொகை வழங்கும் விழா

## தமிழகம் முழுவதும் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு நிலையான வேலைவாய்ப்பை உருவாக்கும் சமூகப் பொறுப்பாக வெற்றி திட்டம் கோவையில் முதன் முறையாக துவக்கம்



மருத்துவக் குறியீட்டுத் துறையில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் கல்வி உதவித்தொகை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில்,

தாட்ஃப்ளோஸ்மெடிக்கல் கோடிங் அகாடமி சார்பாக 'வெற்றி 108' என்ற சமூக அக்கறை திட்டம் துவக்க விழா கோவையில் நடைபெற்றது..

தமிழகம் முழுவதும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையில் இருந்தாலும் திறமையும் ஆர்வமும் கொண்ட மாணவர்களை அடையாளம் கண்டு, மருத்துவக்குறியீட்டுப்பயிற்சிக்கான கல்வி உதவித்தொகைவழங்குவதை அடிப்படையாக கொண்டு கோவையில் முதன் முறையாக நடைபெற்ற வெற்றி திட்டத்தை கோவை சிங்காநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ஸ்ரீகிரி பிரசாத் துவக்கி வைத்தார்..

zது தொடர்பாக செய்தியாளர்களிடம் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி பானுமதி, நிர்வாக இயக்குநர் பாலமுரளி ஆகியோர் பேசுகையில்,தமிழகம்முழுவதும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையில் இருந்தாலும் திறமையும் ஆர்வமும் கொண்ட மாணவர்களை அடையாளம் கண்டு, மருத்துவக்குறியீட்டுப்பயிற்சிக்கான கல்வி உதவித்தொகைவழங்குவதே 'வெற்றி 108' திட்டத்தின் முக்கிய நோக்கம் என தெரிவித்தனர்.

மேலும், மருத்துவக் குறியீட்டுத் துறையில் உள்ள வேலைவாய்ப்புகள், சர்வதேச அளவிலான தொழில் வளர்ச்சி, திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்புக்கான வழிகாட்டுதல்களை மாணவர்களிடம் கொண்டு சேர்ப்பதற்காக இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுவதாகவும் கூறினர்.

தேர்வு, கல்வித் தகுதி, ஆவணச் சரிபார்ப்பு மற்றும் பொருளாதார நிலை உள்ளிட்ட வெளிப்படையான நடைமுறைகளின் அடிப்படையில் தகுதியான மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு கல்வி உதவித்தொகை வழங்கப்படும் என்றும், இந்த முயற்சி மூலம் தமிழகம் முழுவதும் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு நிலையான வேலைவாய்ப்பை உருவாக்கும் சமூகப் பொறுப்பை நிறுவனம் ஏற்றுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் கல்வியாளர்கள், தொழில்துறை வல்லுநர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர்..





ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், கரட்டடிபாளையம் பகுதியில்

# அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் புதிய முழு நேர நியாயவிலைக்கடை கட்டிடங்களையும் திறந்து வைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்கினார்

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், கரட்டடிபாளையம் பகுதியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் புதிய முழு நேர நியாயவிலைக்கடை கட்டிடங்களையும்திறந்துவைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு நேற்று (05.07.2026) வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் தமிழ்நாடு முழுவதும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அரசின் திட்டங்கள் மக்களுக்கும் சென்று சேர வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். அந்த வகையில் நேன்றைய தினம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கூட்டுற வுத்துறையின் சார்பில்,கரட்டடிபாளையம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய முழு நேர நியாய விலை கடையினை திறந்து வைத்தார். இக்கடையின் மூலம் 710 குடும்ப அட்டைதார்களுடன் புதிய முழுநேர நியாயவிலைக் கடையாக செயல்படும். இக்கடையானது அனைத்து வேலை நாட்களிலும் செயல்படும்.

ஈரோடு மாவட்டத்தில் தற்போது மொத்தம் 1,286 நியாயவிலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன.இவற்றில் 940 முழுநேர நியாயவிலைக் கடைகளும், 346 பகுதிநேர நியாயவிலைக் கடைகளும் உள்ளன. மாவட்டத்தில் மொத்தம் 7,59,105 குடும்ப அட்டைகள் பயன்பாட்டில் உள்ளன. கோபிசெட்டிபாளையம் வட்டாரத்தில் மொத்தம் 156 நியாயவிலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன.அவற்றில் 124 முழுநேர நியாயவிலைக் கடைகள், 32 பகுதிநேர நியாயவிலைக் கடைகள் மற்றும் 10 நகரும் நியாயவிலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இவ்வட்டாரத்தில் மொத்தம் 97,869 குடும்ப அட்டைகள் உள்ளன. மேலும், ஊரகப் பகுதியில் 80 முழுநேர நியாயவிலைக் கடைகளும், நகர்ப்புறப் பகுதியில் 44 முழுநேர நியாயவிலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன.கரட்டடிபாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 14 முழுநேர நியாயவிலைக் கடைகளும்,6 பகுதிநேர நியாயவிலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் செய்யாம்பாளையம் நியாயவிலைக் கடையுடன் 710 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன.

மேலும், கோபி சரகத்தில் செயல்படும் 156 நியாயவிலைக் கடைகளில் 96 கடைகள் சொந்தக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 60 நியாயவிலைக் கடைகள் வாடகைக் கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்றன. தொடர்ந்து, அமைச்சர் புதிய நியாயவிலைக் கடையினை திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்கினார். இந்நிகழ்வில், திருப்பூர் (வடக்கு) சட்டமன்ற உறுப்பினர் வி.சத்தியபாமா, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ப.கந்தராஜா கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் (கோபி) பரிமளா, கூட்டுறவு ஒன்றியங்களில் மேலாண்மை இயக்குனர் பிரபு, கூட்டுறவு சங்க செயலாட்சியர் பிரதீப், வட்டாட்சியர் கவியரசு லக்கம்பட்டி பேரூராட்சி செயலர் மகாலட்சுமி உட்பட கூட்டுறவு சங்க பணியாளர்கள் மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சுரண்டை காமராஜர் அரசு கலைக் கல்லூரியில் மாணவர் சேர்க்கை



தென்காசி மாவட்டம் சுரண்டையில் உள்ள காமராஜர் அரசு கலைக் கல்லூரியில் மாணவர் சேர்க்கை நடைப்பெற்று வருகிறது காமராஜர் அரசு கலைக் கல்லூரி (பொ) முதல்வர் அ முருகன் அறிவிப்பு ;-

சுரண்டை காமராஜர் அரசு கலைக் கல்லூரியில் 2026-2027 கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது.

இளநிலைப் படிப்புகளான இளநிலை அறிவியல் (இயற்பியல், வேதியியல், கணிதம்), இளநிலை வணிகவியல், வணிகப் பயன்பாட்டியல், வணிக நிர்வாகவியல், பொருளியல், தமிழ், ஆங்கிலம், கணினி அறிவியல் மற்றும் நுண்ணுயிரியல் உள்ளிட்ட பாடப்பிரிவு களில் ஒரிரு இடங்கள் மட்டுமே உள்ளதாக கல்லூரி நிர்வாகம் தெரிவித்துள்ளது. ஆர்வமுள்ள மாணவர்கள் கல்லூரி அலுவலகத்தை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். முதுநிலைப் படிப்புகளான கணினி அறிவியல், கணிதம், இயற்பியல், வேதியியல், நுண்ணுயிரியல், மின்னணுவியல் மற்றும் தொடர்பியல், வணிகவியல், தமிழ், ஆங்கிலம் மற்றும் பொருளியல் ஆகிய பாடப்பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் இணையவழியாக வரவேற்கப்படுகின்றன.

தகுதியுள்ள மாணவர்கள் www.tngasa.in என்ற இணையதளத்தில் 31-07-2026 தேதிக்குள் விண்ணப்பித்து சேர்க்கை வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் மேலும் சந்தேகங்களுக்கு கல்லூரி அலுவலகத்தை அணுகி ஆலோசனை பெற கல்லூரி (பொ) முதல்வர் அ முருகன் தெரிவித்துளார்

# சுரண்டை அரசு கலைக் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவ மாணவிகளுக்கு புத்தாக்கப் பயிற்சி



தென்காசி மாவட்டம் சுரண்டை காமராஜர் அரசு கலைக் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவ மாணவிகளுக்கான புத்தாக்கப் பயிற்சி (Induction Programme) நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சியில், புதிய மாணவ மாணவிகள் கல்லூரி சூழல், கல்வி நடைமுறைகள், ஒழுக்கம், திறன் மேம்பாடு மற்றும் உயர்கல்வி வாய்ப்புகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

மேலும், மாணவ மாணவிகள் தன்னம்பிக்கையுடன் கல்விப் பயணத்தைத் தொடங்கவும், கல்லூரி வளங்களை சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பேராசிரியர்கள், கல்லூரி அலுவலர்கள் மற்றும் முதலாம் ஆண்டு மாணவ மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# சிங்கப்பூர் சர்வதேச ஃப்ளோர்பால் சாம்பியன்ஷிப்: இந்திய அணியில் தமிழக வீரர்கள் - பல்வேறு தரப்பினரின் வாழ்த்து

சிங்கப்பூரின் Our Tampines Hub வளாகத்தில் ஜூலை 2 முதல் 6 ஆம் தேதி வரை நடைபெற்று வரும் Singapore Open Floorball Championship 2026 சர்வதேச ஃப்ளோர்பால் போட்டியில் இந்திய அணிக்காக தமிழகத்தைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் தேர்வு செய்யப்பட்டு பங்கேற்று வருகின்றனர்.

U-15 Boys, Open Men மற்றும் Open Women ஆகிய பிரிவுகளில் இந்திய அணியை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழக வீரர்கள் பாலவிஷ்ணு, கிஷோர், மனீஷ், அபிஜித், குருஸ்ரீநாத், ரோனித், கலைவாணன், ஜெஸ்வின், செல்வபிரபு, பரசுராம், தரணீஷ், அஜிதா, ரைகா, ரியா, சம்யுக்தா, சொர்ணிஷா மற்றும் எவாஞ்சலின் ஜெஷிபா பிரின்சி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

சர்வதேச அளவில் நடைபெறும் இப்போட்டியில் இந்திய அணிக்காக தமிழக வீரர்கள் களமிறங்குவது தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்க்கும் நிகழ்வாகும். வீரர்கள் அனைவரும் தங்களது சிறப்பான திறமையை வெளிப்படுத்தி இந்தியாவிற்கு வெற்றியையும்பெருமையையும் பெற்றுத் தர வேண்டும் என பொதுமக்கள், விளையாட்டு ஆர்வலர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தோர் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர்.தமிழ்நாடு ஃப்ளோர்பால் சங்க செயலாளர் விஷ்ணு, இந்திய அணியின் மேலாளர் ஆகாஷ், முன்னாள் அரசு தரப்பு வழக்கறிஞரும் ஈரோடு மாவட்ட கௌரவத் தலைவருமான திருமலை, கொங்குநாடு தேசிய கட்சியின் இளைஞரணி செயலாளரும் ஈரோடு மாவட்ட தலைவருமான சூரியமூர்த்தி, ஈரோடு மாவட்ட செயலாளரும் பயிற்சியாளருமான தேவகாந்தன், உடற்கல்வி இயக்குநரும், ஈரோடு சிறகுகள் அமைப்பின் செயலாளர் சிவக்குமார், ஒருங்கிணைப்பாளருமான லோகநாதன், பொருளாளர் ஸ்ரீதேவி செந்தில்குமார், இணைப் பொருளாளர் சுபத்ரா, ஜெயின் பல்கலைக்கழக டாக்டர் அருண் பிரசன்னா, கான்ஃபுட் ஆட்டோமோட்டிவ் பிரைவேட் லிமிடெட்நிர்வாகஇயக்குநர் ரகுநாத்,டி.எஸ்.ஆர். ஈவி மொபிலிட்டி செயல் தலைவர் மனோகரன், எஸ்.எஸ். சூர்யா கிராபிக்ஸ் சுரேஷ், சாரா ஆயுள் மில் உரிமையாளர் சந்துரு.ரகுபதி,விஜயம் வில் விளையாட்டு பயிற்சிபள்ளிமணிகண்டன், சமூக சேவகர் தினேஷ், வினோத், ம. கோபாலகிருஷ்ணன் மற்றும் மணிமுத்து, நிதி ஆலோசகர் குருராஜன், கல்வி ஆலோசகர் வரதராஜன், பிரியங்கா பிளாஸ்டிக் தனபால், ஈரோடு மாவட்ட புகைப்படம் மற்றும் வீடியோ முன்னாள் துணைச் செயலாளர் அன்பரசு, உடற்கல்வி இயக்குநர்கள் டாக்டர் நந்தகுமார், டாக்டர் பிரபு, சரண்யா, பிரபாகரன், கோவிந்தராஜ், ராஜகோபால், குணசீலன் உள்ளிட்டோர் இந்திய அணி வெற்றியுடன் தாயகம் திரும்பி நாட்டிற்கு பெருமைசேர்க்கவாழ்த்துகளைத் தெரிவித்தனர்.



## ரோட்டரி மாவட்டம் 3206 ஆளுநராக ஆர்.எஸ். மாருதி பொறுப்பேற்றார். கோவை மாவட்டத்திற்கு புதிய சேவை திட்டங்கள் புதிய ஆளுநர் அறிவிக்கபட்டுள்ளார்

கோவை, ரோட்டரி மாவட்டம் 3206 புதிய ஆளுநராக ஆர் எஸ் மாருதி பதவி ஏற்பு விழா நிகழ்ச்சி கோவை குனியமுத்தூரில் உள்ள கிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரி கூட்ட அரங்கில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக குமரகுரு கல்வி குடும்பத் தலைவர் கிருஷ்ணராஜ் வானவராயர், சர்வதேச ரோட்டரி அமைப்பின் இயக்குனர் முருகானந்தம், மற்றும் நிர்வாகிகள் செல்லா ராகவேந்திரன், ராஜசேகர், சீனிவாசன், ஆகியோர் கலந்து கொண்டனர். புதிய ஆளுநராக பொறுப்பேற்ற ஆர்எஸ் மாருதி அனைவரது மத்தியிலும் கூறியதாவது..

மிகப்பெரிய சமுதாய சேவை அமைப்பான ரோட்டரியில் வருகின்ற நாட்கள்கோவைமாவட்டத்திற்கு பல்வேறு நல திட்டங்களை செயல்படுத்த உள்ளோம், 100க்கும் மேற்பட்ட கிராமங்களை தத்தெடுத்து மேம்படுத்த உள்ளோம், போதையில்லா கோவை, ஆரோக்கியமான சமுதாயம், பெண்கள் மேம்பாடு, என பல்வேறு திட்டங்களை வரக்கூடிய நாட்களில் செயல்படுத்த உள்ளோம்.

இயற்கையை மேம்படுத்த ஒரு புதிய கட்டமைப்பை ரோட்டரி கட்டமைப்பாக உருவாக்க உள்ளது.சமுதாய மேம்பாட்டிற்கு அர்ப்பணிப்பு உணர்வோடு நாங்கள் சேவைகளை முன்னெடுக்க உள்ளோம் என்று கூறினார். பாரதிய வித்யா பவன் மற்றும் குமரகுரு கல்வி குழுமத்தின் தலைவர் கிருஷ்ணராஜ் வானவராயர் கூறுகையில்.. சமுதாயத்திற்கு மிகப்பெரிய தேவை இது போன்ற ரோட்டரி அமைப்புகள் இதை தங்களை அர்ப்பணித்து பல்வேறு சமூக பணிகளை முன்னெடுக்க உள்ள ஆளுநர் மாருதி உள்ளிட்ட நிர்வாகிகளை பாராட்டுவோம் விழாவில் பல்வேறு ரோட்டரி அமைப்புகளின் நிர்வாகிகள் பங்கேற்று புதிய நிர்வாகிகளை வாழ்த்தினார்.

## கோவை காருண்யா நிகர்நிலை பல்கலைக்கழகத்தில், 33வது பட்டமளிப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

### காருண்யா நிகர் நிலை பல்கலைகழகத்தின் வேந்தர் பால் தினகரன் கலந்து கொண்டு, சுமார் 2001 மாணவ மாணவியர்களுக்கு பட்டங்களை வழங்கினார்



கோவை காருண்யா நகர் பகுதியில் உள்ள, காருண்யா நிகர்நிலை பல்கலைக்கழகத்தில், 33வது பட்டமளிப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த விழாவில் காருண்யா நிகர் நிலை பல்கலைகழகத்தின் வேந்தர் டாக்டர் பால் தினகரன் தலைமை தாங்கினார்.

பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் எலைஜா பிளசிங் வரவேற்புரையாற்றினார். சிறப்பு விருந்தினராக மஹிந்திரா அன்ட் மஹிந்திரா லிமிடெட் நிறுவனத்தின் ஆட்டோமோட்டிவ் வணிக பிரிவு தலைவர் வேலுச்சாமி கலந்து கொண்டு மாணவ மாணவியர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.

இதில் 111 ரேங் ஹோல்டர்களும், 5 மாணவர்களுக்கு

வேந்தர் விருதுகளும், இளங்கலை பாடப்பிரிவில் 1586, மாணவர்களும்,முதுகலை பாடப்பிரிவுகளில்

331 மாணவ மாணவியர்களும் பட்டம் பெற்றதுடன், 84 மாணவர்களுக்கு

டாக்டர் பட்டங்களும் என மோத்தமாக,

2001 மாணவ மாணவியர்களுக்கு பட்டங்கள் வழங்க பட்டது. முன்னதாக மாணவ மாணவியர்கள் மத்தியில் பேசிய சிறப்பு விருந்தினர் வேலுச்சாமி கூறியதாவது..

மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் சவால்களை கதிர் கொள்ள வேண்டும், சமுதாய முன்னேற்றத்திற்க்கு பங்களிக்கும் வகையில் உங்களது பட்டம் இருக்க வேண்டும். கௌரவ முனைவர் பட்டத்தை பெற்ற அவர் கற்றல் என்பது நமது வாழ்நாள் முழுவதும் தொடரும் பயணம், அதில் புதுமை, மற்றம் தொழில்நுட்பத்தின் மூலம் மனித குலத்திற்கு ஏற்படும் பிரச்சினைகளை தீர்க்க பயண்படுத்த வேண்டும் என்றார். திறமை, நேர்மை, கருணை, மற்றும் தொடர்ச்சியான கற்றலின் அவசியத்தை எடுத்து கூறியதுடன் பட்டங்களை பெற்ற மாணவ மாணவியர்களுக்கு தனது வாழ்த்துகளை தெரிவித்தார். தொடர்ந்து பல்கலைக்கழக வேந்தர் டாக்டர் பால் தினகரன் கூறியதாவது..

இன்று உங்களது வாழ்வில் மறக்க முடியாத நாள், காருண்யா பல்கலைக்கழகம் உங்களுக்கு கடின உழைப்பு, விடாமுயற்சி, தன்னம்பிக்கை, ஒழுக்கம், அர்ப்பணிப்பு, ஆகியவற்றின் பரிசை பட்டங்களாக வழங்கியுள்ளது என்று வாழ்த்தக்களை தெரிவித்தார் இந்த நிகழ்ச்சியின் இறுதியாக சிறப்பு விருந்தினர் வேலுச்சாமி க்கு, தலைமைத்துவத்தையும், சேவைகளையும்பார்ட்டி கௌரவ டாக்டர் பட்டம் வழங்கபட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## ராணிப்பேட்டை மாவட்டம், கலவையில் அமைந்துள்ள அங்காள பரமேஸ்வரி அம்மன் மகா கும்பாபிஷேகம்: ஆற்காடு எம்.எல்.ஏ. எஸ்.எம். சுகுமார் சுவாமி தரிசனம்



ராணிப்பேட்டை மாவட்டம், கலவையில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேக விழா பக்தி பரவசத்துடன் நடைபெற்றது.

இந்த விழாவில் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் திரு S.M. சுகுமார், MLA கலந்து கொண்டு அம்மனை தரிசித்து சிறப்பு வழிபாடு செய்தார். பின்னர் கோயில் நிர்வாகிகள் மற்றும் பக்தர்களை சந்தித்து மகா கும்பாபிஷேக விழாவிற்கான வாழ்த்துகளை தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கலவை பேரூராட்சி கழக செயலாளர் K.R. சதீஷ், திமிரி கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் சொரையூர் M. குமார், மாவட்ட கழக பொருளாளர் அப்துல்லா, மண்டல தகவல் தொழில்நுட்ப பிரிவு துணை செயலாளர் அக்ரி K. பாலாஜி, ஒன்றிய அவைத்தலைவர் ரங்கநாதன், மாவட்ட மாணவரணி தலைவர் ஜிம் M. பிரபு, துணைத் தலைவர் நீலாவதி தண்டபாணி,ஒன்றியமாவட்ட பிரதிநிதி நாகலேரி அசோக், மகளிர் அணி இணை செயலாளர் பரிமளா, கவுன்சிலர்கள் மேத்தாஜி பிரபு, தினேஷ், நித்யா சக்தி, மணிகண்டன், காமராஜ், யுவராஜ், பாபு பாய், தகவல் தொழில்நுட்ப பிரிவு நிர்வாகி ஆர். செல்வராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள்,பொதுமக்கள் மற்றும் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு ஆலயம் முழுவதும் மலர் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. சிறப்பு யாக பூஜைகள்,தீபாராதனைமற்றும் அன்னதானம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று அம்மனை தரிசித்து அருள் பெற்றனர்.

## மகா பிரத்தியங்கரா தேவி கோவிலுக்கு புதிய சிமெண்ட் சாலை அமைக்க பக்தர்கள் கோரிக்கை

இராணிப்பேட்டை நகராட்சிக்கு உட்பட்ட மிசிறி நகர், வார்டு எண் 9 பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு மகா பிரத்தியங்கரா தேவி திருக்கோவிலுக்குசெல்லும் சேதமடைந்த சாலையை அகற்றி, புதிய சிமெண்ட் சாலை அமைத்து தர வேண்டும் என பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பல ஆண்டுகளாக பக்தர்களின் வழிபாட்டுத் தலமாக விளங்கி வரும் இக்கோவிலுக்கு தினந்தோறும் நூற்றுக்கும் மேற்பட்ட பக்தர்கள் வருகை தருகின்றனர். குறிப்பாக, அமாவாசை நாட்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய வருவது வழக்கம்.

கோவிலுக்கு செல்லும் தார் சாலை பல ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட நிலையில், தற்போது முழுமையாக சேதமடைந்து குண்டும் குழியுமாககாணப்படுகிறது. இதனால் பக்தர்கள், வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர்.

குறிப்பாக, சாலை சீரற்ற நிலையில் இருப்பதால் பக்தர்கள் அடிக்கடி தடுமாறி கீழே விழும் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

முதியோர், கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகளுடன் வரும் குடும்பங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் மிகவும் சிரமத்துடன் கோவிலுக்கு சென்று வர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பக்தர்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நேரில் ஆய்வு மேற்கொண்டு, பக்தர்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, போர்க்கால அடிப்படையில் சேதமடைந்த



சாலையை அகற்றி புதிய சிமெண்ட் சாலை அமைக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என பக்தர்கள் மற்றும் அப்பகுதி பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## தூத்துக்குடியில் மாபெரும் இலவச கண் பரிசோதனை முகாம்



தூத்துக்குடியில் வாஸன் கண் மருத்துவமனை, தூத்துக்குடி மாவட்ட அண்ணா சங்குகுளி தொழிலாளர் சங்கம் (திரேஸ்புரம்) மற்றும் தூத்துக்குடி மாவட்டம் கோபுரத்து முனியசாமி கனவா மீன்பிடி தொழிலாளர் சங்கம் (திரேஸ்புரம்) ஆகியவை இணைந்து நடத்தும் மாபெரும் இலவச கண் பரிசோதனை முகாம் தூத்துக்குடி திரேஸ்புரம்,முத்தரையர் காலனி,பகுதியில் இன்று காலை 9.00 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறுகிறது.

முகாமை முன்னின்று தூத்துக்குடி மாவட்ட அண்ணா சங்குகுளி தொழிலாளர் சங்க தலைவர் இசக்கிமுத்து மற்றும் தூத்துக்குடி மாவட்டம் கோபுரத்து முனியசாமி கனவா மீன்பிடி தொழிலாளர் சங்க பொருளாளர் சந்தனராஜ் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற மாபெரும் இலவச கண் பரிசோதனை முகாமில் மீனவர் பகுதி பொதுமக்கள் உள்ளிட்ட 200 மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன் அடைந்தனர். நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாவட்ட அண்ணா சங்குகுளி தொழிலாளர் சங்கம் செயலாளர் முருகையா, பொருளாளர் விமல்சன்,

துணைத்தலைவர் மாரிலிங்கம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் கோபுரத்து முனியசாமி கனவா மீன்பிடி தொழிலாளர் சங்கம் தலைவர் முனியசாமி, செயலாளர் பாலு, பொருளாளர் சந்தனராஜ், துணைத்தலைவர் ராஜேந்திரன் மற்றும் நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



உச்சநீதிமன்றம், ஓய்வு பெற ஐந்து ஆண்டுகளுக்கு மேல் இருப்பவர்கள் பணியில் தொடர்ந்து நீடிக்க வேண்டுமானால், மூன்று ஆண்டுகளுக்குள் ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்று தீர்ப்பு வழங்கியது. அதன் விளைவாக, பணியில் இருக்கும் ஆசிரியர்களுக்குச் சிறப்புத் தகுதித் தேர்வு அறிவிக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் முதற்கட்டமாக 4ஆம் தேதி இடைநிலை ஆசிரியர்களுக்கான முதல் தாளும், 5ஆம் தேதி பட்டதாரி ஆசிரியர்களுக்கான இரண்டாம் தாளும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி இன்று (05.07.2026) தமிழ்நாடு முழுவதும் இத்தேர்வு நடைபெற்று வருகிறது. அந்த வகையில், திருவள்ளூர் மாவட்டக் கண்காணிப்பு அலுவலரும் தமிழ்நாடு தொடக்கக்கல்வி இயக்குநருமான முனைவர் பூ.ஆ.நரேஷ் அவர்கள், இன்று திருவள்ளூர் நகராட்சியில் உள்ள ஆர்.எம்.ஜெயின் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தேர்வு மையத்தை ஆய்வு செய்து, தேர்வு அறையில் தேர்வர்களைக் கண்காணித்தனர்.

DHINATH DHALAM Morning Tamil Daily 06.07.2026

# வருவாய்த்துறை அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையனுடன் ஈரோடு வடிவேல் ராமன் சந்திப்பு



சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் 221 ம் ஆண்டு நினைவு நாள் விழா. வருகிற ஆடி 1 (17 7 2026) வெள்ளிக்கிழமை.... ஈரோடு மாவட்டம் அரச்சலூர் மாவீரன் பொல்லான் நினைவு அரங்கத்தில் நடைபெற உள்ளது. மாண்புமிகுவருவாய்த்துறைஅமைச்சர்கே.ஏ.செங்கோட்டையன்அவர்களை.சமூகநீதி மக்கள்கட்சி மாவீரன்பொல்லான் பேரவை நிறுவனத் தலைவர் ஈரோடு வடிவேல் ராமன் நேரில் சந்தித்து விழா அழைப்பிதழ் வழங்கினார்.. தமிழக வெற்றிக் கழகத்தின் ஈரோடு வடக்கு மாவட்ட செயலாளர் பிரதீப் அவர்கள் மாவீரன் பொல்லான் பேரவை பொதுச் செயலாளர் சண்முகம், மாநிலத் துணைத் தலைவர் எம் கே ஆறுமுகம், மாநில இளைஞரணி செயலாளர் ஆறுமுகம், மாநில அமைப்பு செயலாளர் தென்றல் நாகராஜ்! ஆகியோர் கலந்து கொண்டனர்.

# குதிரைப் பேரக் குற்றச்சாட்டு உண்மையெனில் விசாரிக்க வேண்டும்; தொல்.திருமாவளவன் பேட்டி



சென்னை: குதிரைப் பேரக் குற்றச்சாட்டு உண்மையெனில் அது தொடர்பாக விசாரிக்க வேண்டும்என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

சென்னைஅசோக்நகரில் உள்ள விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைமை அலுவலகத்தில் இன்று (ஜூலை 05) செய்தியாளர்களைச் சந்தித்த அக்கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி., "ஈழமே எங்கள் இலக்கு என்ற நிலைப்பாட்டை இன்றைய நாளில் மீண்டும் உறுதிப்படுத்துகிறோம். குதிரைப் பேர குற்றச்சாட்டு உண்மையானதெனில் விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.இதில் ஆளுநருக்கு அதிகாரம் இருந்தால் அவர் உடனடியாக தலையிட வேண்டும்" என்றார்.

ஊழல் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டதாக கூறப்படும் விஜயபாஸ்கர் தவெகவில்இணைந்தது குறித்து எழுந்துள்ள விமர்சனங்களுக்கு பதிலளித்த தொல். திருமாவளவன், "இந்தக் கேள்வியை நேரடியாக விஜயபாஸ்கரிடமே கேட்க வேண்டும். அவர் ஏன் அதிமுகவிலிருந்து விலகினார் என்பதையும் அவரிடமே கேட்பதே சரியான நடைமுறை. அதிமுக ஏன் அமைதியாக இருக்கிறது? அதிமுகவிலிருந்து நிர்வாகிகளை வெளியேற்ற குதிரை பேரம் நடைபெறுகிறது என்ற குற்றச்சாட்டு இருந்தால், அதிமுக தலைவர்கள் ஏன் இதுகுறித்து வெளிப்படையாக பேசவில்லை? ஆவேசப்பட வேண்டியவர்கள், ஆத்திரப்பட வேண்டியவர்கள்,தவெகவுக்குஎதிராக கொந்தளிக்க வேண்டியவர்கள் ஏன் அமைதியாக இருக்கிறார்கள்?" என்று கேள்வி எழுப்பினார்.

மேலும், "ஆளுநரிடம் மனுக்கொடுப்பதை மட்டும் கடமையாகச் செய்கிறார்கள். ஆனால், இதை மக்கள் பிரச்சனையாக மாற்றுவதற்கான அரசியல் முயற்சியை அதிமுக மேற்கொண்டதாகத் தெரியவில்லை. எங்கள் கட்சியைச் சீர்குலைக்க முயற்சிக்கிறார்கள். அதை அனுமதிக்க மாட்டோம்என்ற உறுதியான குரலும் அதிமுக தலைமையிலிருந்து வரவில்லை. சம்பந்தப்பட்டவர்களிடமே கேள்வி கேட்க வேண்டும். அதிமுக தலைமையிடம் கேட்க வேண்டிய கேள்விகளை எங்களிடம் கேட்பதால் எந்தப் பயனும் இல்லை. குதிரை பேரத்தில்தவெகஈடுபட்டதாகக்கூறினால்தவெக தலைமையிடம் கேளுங்கள். திமுக மீது குற்றச்சாட்டு இருந்தால் திமுக தலைமையிடம் கேளுங்கள். அதிமுக பாதிக்கப்பட்டதாகக் கூறப்பட்டால் அதிமுக தலைமையிடமேகேள்வி எழுப்புங்கள். சம்பந்தப்பட்டவர்களிடம் கேள்வி கேட்காமல், இதில் தொடர்பில்லாதவர்களிடம் கேள்வி எழுப்புவது அரசியல் புரிதல் இல்லாத அணுகுமுறை.

தமிழ்நாட்டு அரசியலில் குதிரைப் பேரம் நடைபெறுகிறது என்று வெளிப்படையாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தால், அதில் தொடர்புடையவர்களிடமேபதில்கேட்க வேண்டும். அரசியல் அறத்தின்மீது நம்பிக்கை உள்ளவர்கள், குற்றச்சாட்டுக்கு உள்ளான கட்சிகளிடமே நேரடியாக விளக்கம் கேட்கவேண்டும்;அவர்கள் மக்களிடம் பதில் சொல்லட்டும்" என்று குறிப்பிட்டார்.

# Just over two months into marriage, Delhi woman dies after fall from NDMC flats; family alleges dowry murder



*A 28-year-old newlywed woman died after allegedly falling from the third floor of an NDMC residential complex in Delhi's Lodhi Colony area, in a suspected dowry-related case that has triggered allegations of murder by her family.*

*Police said in a statement that the deceased, identified as Akriti, a resident of Pushp Vihar, was found critically injured after an alleged fall from the B-Block of NDMC Flats at Palika Kunj on Saturday. She was rushed to the All India Institute of Medical Sciences (AIIMS), where doctors declared her brought dead.*

*Akriti had married on April 24 this year and was working as a sales executive at a private company in Chhatarpur, police said. Officials added that since the death occurred within seven years of marriage, mandatory inquest proceedings have been initiated and the Sub-Divisional Magistrate (SDM) has been informed.*

*Police said all aspects of the incident are being verified and an investigation is underway. Statements of family members and other witnesses are being recorded, news agency PTI reported. However, the woman's family has rejected the possibility of suicide and alleged that she was killed by her husband and in-laws over dowry-related demands. Akriti's younger brother alleged that the incident is being portrayed as suicide to protect those responsible. He said his sister was mentally strong and the eldest sibling in the family.*

*The family further alleged that Akriti had been subjected to harassment and physical assault after marriage. They said the marriage was a love-cum-arranged alliance, solemnised barely two-and-a-half months ago, and claimed that dowry demands intensified after the wedding. The incident comes amid continued reporting of suspected dowry-related deaths in Delhi and other parts of the country. In a similar case reported a month ago, a 25-year-old woman from northeast Delhi's Mustafabad allegedly died by suicide after jumping from the fourth floor of a building. Her family had also accused her husband and in-laws of dowry harassment.*

*In a similar incident reported earlier, the death of Twisha Sharma had sparked allegations of harassment and dowry-linked pressure from her family against her husband and in-laws. The case had triggered widespread discussion on social media over the recurring nature of such incidents and the need for stricter enforcement of dowry laws.*




# கோவை சுங்கம் பகுதியில் உள்ள நிர்மலா பெண்கள் கல்லூரியில் நடைபெற்ற விருதுகள் வழங்கும் விழா

## சுமார் 20க்கும் மேற்பட்ட நபர்களுக்கு பல்வேறு துறைகளில் சாதனை செய்ததற்காக வழங்கி பெருமைபடுத்தப்பட்டது

தமிழ்நாடு நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி அசோசியேசன்,நிர்மலா பெண்கள் கல்லூரி மற்றும்

தமிழ் இலக்கிய பாசறை, இணைந்து நடத்திய கண்ணதாசன் பிறந்தநாள் விழா, மற்றும் பல்வேறு துறைகளில் சாதனை படைத்த சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கும் விழா நிகழ்ச்சி கோவை சுங்கம் பகுதியில் உள்ள, நிர்மலா பெண்கள் கல்லூரி விழா அரங்கில் நடைபெற்றது. இந்த விழாவில், தமிழ்நாடு நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி அசோசியேசன் சங்க தலைவர் கிருஷ்ணராஜ் தலைமை தாங்கினார். விழாவில் இன்று கவிஞர் கண்ணதாசனின் பிறந்த நாளை முன்னிட்டு சிறப்பு பட்டிமன்றம் நடைபெற்றது. தொடர்ந்து கண்ணதாசனின் வாழ்க்கைவரலாறு குறித்தும், அவர் கடந்து வந்தசாதனைகள் குறித்தும் மாணவியர்களுக்கு எடுத்துரைக்க பட்டது. தொடர்ந்து பல்வேறு துறைகளில், சாதனை படைத்த சாதனை மனிதர்களின் சேவைகளை பாரட்டும் விதமாக பல்வேறு விருதுகள் வழங்கபட்டது.குறிப்பாக சமூக சேவையில் சிறந்து விளங்கியதற்காக கோவை சுண்டபாளையம் பகுதியை சேர்ந்த, தொழிலதிபர், மகாராஜனுக்கு சமூக சேவை செம்மல் விருது எனும் விருது வழங்க பட்டது. முன்னதாக விழா மேடையில் சிறப்புரையாற்றிய கிருஷ்ணராஜ் கூறியதாவது.. தற்போதய நவீன உலகில் அனைவரும் வாழ்க்கையை ஓடி தான் கடக்க வேண்டியுள்ளது. இந்த நிலையில் தனக்காகவும், வாழ்ந்து தன்னுடன் வசிக்கும் பொதுமக்களுக்காபவும் வாழும் மனிதர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே செல்கின்றது. இப்படி பட்ட சூல்நிலையில், பல்வேறு துறைகளில் சாதனை செய்து வருபவர்களை பாராட்டி அவர்களுக்கு விருதுகள் வழங்குவது என்பது, அவர்களின் சேவையை பாராட்டுவதுடன்,மாணவ மாணவியர்களின் மனதில் இத்தகைய சமூக சேவை எண்ணங்களை வளர்க்க வேண்டு'ம் என்பதே என்று தெரிவித்தார் என்பது குறிப்பிடத்த க்கது.

# ஆளுநரும் கூட்டணி பேச ஆரம்பித்துவிட்டாரா என தெரியவில்லை; மாணிக்கம் தாகூர் விமர்சனம்



சென்னை: ஆளுநரை சந்தித்து திமுக, அதிமுக, பாஜக ஆகிய கட்சிகள் தவெக அரசு மீது புகார் அளித்த நிலையில், ஆளுநர் கூட்டணி பேசிக் கொண்டிருக்கிறாரா என்று தெரியவில்லை என தமிழ்நாடு காங்கிரஸ் மாநில தலைவர் மாணிக்கம் தாகூர் விமர்சித்துள்ளார்.

சென்னை சத்தியமூர்த்தி பவனில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் மாணிக்கம் தாகூர் நேற்று நிர்வாகிகளை சந்தித்தார். இதில் கன்னியாகுமரி நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் உள்ளிட்டோர் கலந்துகொண்டார்

காங்கிரஸ் மாநில தலைவர் மாணிக்கம் தாகூரை இலங்கையில் இருந்து வருகை தந்த இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் தேசிய பேரவை தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சந்தித்து பேசினார்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய மாணிக்கம் தாகூரிடம் தவெக அரசு மீது திமுக, அதிமுக, பாஜக ஆகிய கட்சிகள் ஆளுநரை சந்தித்து குதிரைபேரம் உட்பட பல்வேறு புகார்களை முன்வைத்தது குறித்த கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளித்த அவர், ஆளுநர் கூட்டணி பேசிக் கொண்டிருக்கிறாரா என்று தெரியவில்லை. ஆளுநர் கூட்டணி பேசுகின்ற வேலையை ஆரம்பித்துவிட்டாரா என்ற கேள்வியை அவரிடம்தான் நீங்கள் கேட்க வேண்டும். குதிரை பேரம் என்பதற்கு என்ன அர்த்தம் என்று தேடினால், உங்களுக்கு அதனின் உண்மையான அர்த்தம் புரியும்.

234 சட்டமன்ற உறுப்பினர்களில் இதுவரை யாரேனும்குதிரைபேரம் நடைபெற்றதாக காவல்துறையின் புகார் கொடுத்திருக்கிறார்களா, அப்படி புகார் கொடுத்து குதிரை பேரம் நடைபெற்றதாக ஆதாரங்களுடன் சொன்னால், இந்த புகார் நியாயமானது. குதிரை பேரம் என்று கூறுவது விநோதமாக உள்ளது" என்றார்.

திமுக சட்டமன்ற உறுப்பினர்களிடம் பேரம் பேசியதாக ஆளுநரிடம் புகார் கொடுத்தது தொடர்பான கேள்விக்கு, "யார் பேசினார்கள் என்பதையும், அதற்கான ஆதாரத்தையும் அவர்கள் அளிக்க வேண்டும். இது ஆதாரங்களின்றி பொய் குற்றச்சா ட்டாகவே இருக்கிறது" என்றார்.

உயர் கல்வித்துறை அமைச்சர் விஸ்வநாதன் மீதான சர்ச்சை குறித்து பேசிய அவர், "தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்தவர்கள் எப்படி உயர் கல்வித்துறை அமைச்சராக முடியும் என அவர்கள் நினைக்கிறார்கள். கோவி செழியனுக்கு பின்னர் இத்துறைக்கு அமைச்சராக விஸ்வநாதன் நியமிக்கப்ப ட்டதால், அவர்கள் ஆடி போயிருக்கிறார்கள். அவர் இதுவரை எந்த குற்றச்சாட்டையும் சந்திக்காதவர்.

மஞ்சள் காமாலை நோய் வந்தவர்களுக்கு எதை பார்த்தாலும் மஞ்சளாக தெரியும். அதை போல்தான் அவர் மீது புகார் சுமத்தப்பட்டு ள்ளது. பாஜகவின் இந்த பார்வையை நான் வன்மையாக கண்டிக்கிறேன்" எனக் கூறினார்.

முன்னதாக, இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை தலைவர் மாணிக்கம் தாகூர் மற்றும் எம்.பி விஜய் வசந்த் இணைந்து வரவேற்றனர். தமிழ்நாட்டிற்கு சகோதரத்துவ மாண்போடும் அவர் வருகைப் புரிந்திருப்பதாகவும், அவரிடம் இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் நிலை பற்றி பேசியதாகவும் தெரிவித்தார்.

மேலும், இலங்கையில் வாழ்கின்ற தமிழ் சகோதரர்களுக்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி உடனிருக்கிறது என உறுதியளித்தார். தொடர்ந்து பேசிய இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், போர் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்து விட்டது. இலங்கையில் தமிழ் மக்களின் அடையாளம்திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகிறது. போரில் ஏற்கனவே உயிர்கள் அழிக்கப்பட்டன.தற்போது எங்களின் அடையாளங்கள்அழிக்கப்படுகிறது. நாங்கள் ஆனாதையாக இருக்கிறோம். எங்கள் பிரச்சனைகளை எடுத்துக்கூற தமிழ்நாட்டிற்கு வந்துள்ளோம்" என்றார்.

# பண்ருட்டி அருகே டிராக்டர் மினி லாரி மோதி விபத்து: 4 கூலித் தொழிலாளிகள் உயிரிழப்பு



கடலூர் மாவட்டம் பண்ருட்டிஅடுத்தமருங்கூரைச் சேர்ந்தவர் வேல்முருகன். இவர் தனது டிராக்டரில் முந்திரி விறகு ஏற்றிக்கொண்டுகுறிஞ்சிப்பாடி-வெங்கடாம்பேட்டை சாலையில் சென்று கொண்டிருந்தார். அதே திசையில்சவுக்குமற்றும் நாற்று நடும் பணிக்காக கூலித் தொழிலாளர்கள் மினி லாரியில் சென்று கொண்டிருந்தனர்.

பணிக்கன் குப்பம் அருகே சென்றபோது முன்னால்சென்றடிராக்டர் மீது மினி லாரி மோதி விபத்துக்குள்ளானது. அதில் மினி லாரியில் பயணம் செய்த ராணி, ரவிச்சந்திரன்,காந்திமதி, சத்யா ஆகிய நான்கு கூலித் தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும் காயமடைந்த ஆறு பேர் கடலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.